பெறுகின்றனவா அல்லது நஷ்டத்தில் நடைபெறுகின்றனவா? மாவட்ட அளவிலும் இப்படிப்பட்ட தொழிற் சாலைகளை அமைக்கும் திட்டத்தை விஸ்தரிக்க அரசுக்கு உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: தலைவர் அவர்களே, திருமழிசையில் உள்ள இயந்திர செங்கல் தொழிற் சாலை ஒன்றும், தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தின் சார்பில் பொன்னேரி சமீபம் ஸதர்ன் பிரிக்ஸ் வொர்க்ஸ் என்ற செங்கற் தொழிற்சாலை நிறுவனமும் உள்ளது. திருமழிசையிலுள்ள செங்கற் தொழிற்சாலையில் நாள் ஒன்றுக்கு 35 ஆயிரம் கற்கள் தான் உற்பத்தியாகின்றன. ஸதர்ன் பிரிக்ஸ் வொர்க்ஸில் நாள் ஒன்றுக்கு 80 ஆயிரம் செங்கற்களும், 15 ஆயிரம் ஓடுகளும் உற்பத்தி செய்யப்படுகின்றன. மாவட்ட அளவில் இந்தத் திட்டம் விஸ்தரிக்கப்படுமா என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கிறார்கள். இப்போது இயங்கி வருகின்ற தொழிற்சாலைகளில் திருமழிசையில் உள்ள தொழிற்சாலை நஷ்டத்தில் தான் இயங்கி வருகிறது. அங்கே நாள் ஒன்றுக்கு 75 ஆயிரம் உற்பத்தி செய்தால் தான் ப்ரேக்கிங் ஈவன் பாயின்ட் என்று சொல்வார்களே, அதாவது நட்டத்தைத் தவிர்க்கும் இலக்கை அடைய முடியும். இதை இன்னும் வெற்றிகரமாக இயங்கச் செய்ய முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இது வெற்றிகரமாக நடைபெற்ற பின்னால் மற்ற பகுதிகளுக்கும் விஸ்தரிக்கும் திட்டத்தைப் பற்றி ஆலோசனை செய்யலாம். இது தவிர தனிப்பட்ட நபர்கள் யாராவது மற்ற இடங்களில் நடத்துவதற்கு கடன் உதவி கோரினால், அதைப் பெற்று தருவதற்கு அரசு தயாராக இருக்கிறது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

பட்டு வளர்ப்பு அபிவிருத்தி கழகம்.

* வினா எண். 34 திரு. எம். அண்ணாமலை: மாண்புமிகு கிராமத் தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

அரூர் வட்டத்தில் பட்டு வளர்ப்பு அபிவிருத்திக் கழகம் அமைக்கும் செயற் குறிப்பு அரசுக்கு உள்ளதா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: அரூர் வட்டத்தில் பட்டு வளர்ப்பு அபிவிருத்திக் கழகம் அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் இல்லை.

திரு. எம். அண்ணாமலை; தலைவர் அவர்களே, அரூர் ஊத்தங்கரைப் பகுதியில் தரமான பட்டு உற்பத்தி செய்யப் பட்டு வருகிறது. இதை பயன்படுத்தி அரூர் பகுதியில் பட்டு அபிவிருத்தி கழகம் ஒன்று அமைக்க வேண்டும். மேலும் இதற்

கான மார்க்கட் விலையோ பெங்களூர், ராம்நகர், மார்க்கட்டில் சேலம் தர்மபுரி பட்டு தரம் மிக சிறந்தது என்று அங்கு 28 ரூபாய், 35 ரூபாய் என்று கொடுக்கப்படுகிறது. ஆனால், ஓசூர் கிருஷ்ணகிரி பகுதியில் 18 ரூபாய் முதல் 25 ரூபாய் வரைதான கொடுக்கப்படுகிறது. ஆகவே தரமான வகையில் உற்பத்தி செய்யப்படுகின்ற பட்டுக்கு சரியான விலை கிடைக்கவில்லை என்ற அதிருப்தி அங்குள்ள விவசாயிகள் மத்தியில் இருக்கிறது. ஆகவே இதை போக்க சீரான விலை கிடைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவர் அவர்களே, அரூர் வட்டம் தருமபுரி மாவட்டத்திற்குள் உள்ளது. தருமபுரி மாவட்ட அபிவிருத்திக் குழு பல்வேறு திட்டங்களுக்கு பட்டு வளர்ச்சிக்காக உதவி செய்து வருகின்றது. பட்டு வளர்ச்சி அபிவிருத்தி தமிழகத்திலே வேகமாக வளர்ந்து வருகின்ற ஒன்றாக இருக்கிறது. எனவே, ஒவ்வொரு வட்டத்திற்கும் அபிவிருத்திக் கழகம் இருப்பது அவசியமில்லை. நான் ஏற்கனவே இதற்கு விடை அளித்திருக்கிறேன். மற்றொன்று. விலைப் பிரச்சனையைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். இப்போது புதிதாக மாநில அளவில் கூட்டுறவு பட்டு சந்தை (state level co-operative marketing federation) ஒன்று ஏற்படுத்தப்பட்டு இருக்கிறோம் அதன் மூலமாக நம்முடைய மாநிலத்தில் தயாரிக்கப் படுகின்ற இந்தப் பட்டுகளுக்கு நியாயமான, நல்ல விலை கிடைக்கக்கூடிய சூழ்நிலை உருவாகியுள்ளது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

ரிசர்வ் டூட்டி டாக்டர்கள்.

* வினா எண் 35—திரு வி. சே. கோதண்டராமன — மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ?

(அ) ஆஸ்பத்திரிகளில் ரிசர்வ் டூட்டி என்ற பெயராலே எத்தனை டாக்டர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள். மாவட்ட வாரியாக ?

(ஆ) எத்தனை வருடம் சர்வீஸ்காரர்களை அப்படிப் போடப்படுகிறது ?

மாண்புமிகு திருச்சி ஆர். சௌந்திரராஜன் ; இக்கேள்வி சம்பந்தமான விவரங்கள் அடங்கிய அறிக்கை *ஒன்று அவையின் முன் வைக்கப்பட்டுள்ளது.

---

*[605ம் பக்கங்களில் இணைப்பு III ஆக அச்சிடப் பெற்றுள்ளது.]